வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 25.04.2026 சனிக்கிழமை | இதழ் : 109 | பக்கங்கள் : 08

# சட்ட ஆவணங்கள் இருந்தால் காணிகளை பெற்று தருவோம்!

### மயிலிட்டியில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட வலி.வடக்கு மக்களிடம் கூறினார் இளங்குமரன் எம்.பி.



யாழ்ப்பாணம், ஏப். 25

"உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள உங்கள் காணிகளுக்கான சட்ட ரீதியான ஆவணங்கள் உங்களிடம் இருந்தால், அந்தக் காணிகளைப் பெற்று தருவோம். உங்கள் காணிகளை பலவந்தமாக வைத்துக்கொள்ளும் எண்ணம் தேசிய மக்கள் சக்தியினருக்கு இல்லை" என தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு பிரதேசத்தில் கடந்த 36 வருடங்களுக்கு மேலாக இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை மீளத் தம்மிடமே ஒப்படைக்குமாறு அப்பகுதி மக்கள் நேற்று வெள் ளிக்கிழமை மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்துக்கு செல்லும் பாதைக்கு

07

## அமெரிக்கா-ஈரான் இடையிலான அமைதி பேச்சு தொடரவேண்டும்!

### பாப்பரசர் லியோ வலியுறுத்து



வத்திக்கான், ஏப். 25

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் நிலவும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு பரிசுத்த பாப்பரசர் 14ஆம் லியோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த யுத்தத்தினால் ஈரானில் உள்ள ஒட்டுமொத்த அப்பாவி மக்களும் சொல்லொ ணாத் துயரங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், அமைதியை மேம்படுத்தவும், போர் அச்சுறுத்தலை நீக்கவும், சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிக்கவும் அனைத்துத் தரப்பினரும் தங்களால் இயன்ற முயற்சியை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், ஈரானில் முன்னெடுக்கப்படும் அமெரிக்க - இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகளைத் பரிசுத்த பாப்பரசர் கடுமையாக விமர்சித்து வருகிறார்.

(அ)

## உறுப்பினர் பேசுவதற்கு முற்பட்டவேளை கூட்டத்தை விட்டு வெளியேறிய தவிசாளர்!

### வலி.தென்மேற்கு பிரதேச சபையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 25

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று தவிசாளர் க.ஜெசீதன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது உறுப்பினரான நா.பகீரதன், தவிசாளரின் வட்டாரத்தில் உள்ள பிரச்னை ஒன்றை பேசுவதற்கு முயன்றவேளை கூட்டத்தை முடித்துவிட்டு தவிசாளர் எழுந்து சென்றுள்ளார்.

இதன்போது தான் கருத்து தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்றும், கூட்டத்தை

07

## நெடுந்தீவில் பணியாற்றும் அலுவலர்களுக்கு ஆபத்து கொடுப்பனவை அதிகரிக்கவேண்டும்

### வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 25

நெடுந்தீவு பிரதேசத்துக்குச் சென்று பணியாற்றும் அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஆபத்துக் கொடுப்பனவை அதிகரிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்னவின் ஆலோசகரும், முன்னாள் மூத்த நிர்வாக அதிகாரியுமான அசோக பீரிஸ் மற்றும் வடக்கு மாகாண ஆளுநருக்கு இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

நெடுந்தீவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தற்போது

07

## ரணிலின் பாரியாரிடம் வாக்குமூலம்

கொழும்பு, ஏப். 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வீட்டுக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் நேற்று காலை 9.30 மணியளவில் சென்றுள்ளனர்.

07

## அர்ச்சுனா எம்.பிக்கு பிணை

யாழ்ப்பாணம், ஏப். 25

தெல்லிப்பழை வைத்தியசாலை புற்றுநோய்ப் பிரிவு வைத்தியர் தொடர்பில், சமூக வலைத் தளங்களில் அவ தூறு பரப்பினர் எனும் குற்றச்சாட்டில்,

07

## வெப்ப அளவு இன்று உச்சம்!

கொழும்பு, ஏப். 25

வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசிப்பவர்களுக்கு வெப்பம் தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று மதியம் வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் மனித உடல் உணரும் வெப்பக் குறியீடு எச்சரிக்கை மட்டம் வரை அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சூரிய ஒளியில் நீண்ட நேரம் இருப்பதும் வெளிப்புறச் செயல்பாடுகளில் ஈடுபடுவதும்

07

## அடிப்படை பிரச்னைகளை தீருங்கள்! நெடுந்தீவு மக்கள் நேற்று போராட்டம்!!



யாழ்ப்பாணம், ஏப். 25

நெடுந்தீவில் பல வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாத மக்களின் அடிப்படை பிரச்னைகளை தீர்க்கக் கோரி கவனயீர்ப்புப் போராட்டம் நெடுந்தீவு

07

## வளங்கள் நிறைந்த முல்லைத்தீவு வறுமை நிலையில் முதலிடத்தில்!

### வடக்கு மாகாண ஆளுநர் கவலை

முல்லைத்தீவு, ஏப். 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இயற்கை வளங்களை முழுமையாகவும் அறிவியல் ரீதியாகவும் பயன்படுத்துவதன் ஊடாக, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வளங்கள் நிறைந்த முல்லைத்தீவு மாவட்டம் வறுமையில் முதலிடத்தில் இருப்பது கவலைக்குரியது எனவும் அவர் கூறினார்.

07

## எரிபொருள்களின் விலைகள் நிர்ணயத்துக்கு புதிய திட்டம்

கொழும்பு, ஏப். 25

எரிபொருள் விலை நிர்ணயத்தை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறை அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவது, பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் என்று அந்த ஆணைக்குழு கருதுகிறது.

இதன் மூலம் உண்மையான செலவுகள் மற்றும் நியாயமான இலாப வரம்புகளின் அடிப்படையில், தெளிவான மற்றும் வெளிப்படையான முறையில் முடிவுகளை எடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி

07

## சம்பா விலை குறைப்பு

கொழும்பு, ஏப். 25

கொழும்பு - புறக்கோட்டை மொத்தச் சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட சம்பா அரிசி வகைகளின் விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விடயங்களை அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் கணேஷ் விநாயகசுந்தரம் வெளியிட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து இதுவரை சுமார் 27,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொழும்பில் மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் இடைநிறுத்தம்!

## 1200 பெண்கள் பாதிப்பு

கொழும்பு, ஏப். 25

கொழும்பு புற்றுநோய் தொடக்கநிலை கண்டறியும் மையம் அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு மார்பகப் புற்றுநோய் பரிசோதனைகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் மம்மோகிராபி இயந்திரத்தை நிறுவ முடியாமல் இருப்பதே இதற்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

நாரஹேன்பிட்டியிலுள்ள எல்விட்டிகல மாவத்தையில் கடந்த 20 ஆண்டுகளாக இயங்கி வந்த இந்த மையம், கடந்த பெப்ரவரி 9 ஆம் திகதி கொழும்பு தேசிய மருத்துவமனையின் வெளிநோயாளிப் பிரிவுக்கு அருகிலுள்ள புதிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டது.

புதிய இடத்தில் மருத்துவ சேவைகள் தொடங்கப்பட்ட போதிலும், மம்மோகிராபி இயந்திரத்தை நிறுவுவதற்குச் பொருத்தமான இடம் ஒதுக்கப்படாததால் பரிசோதனைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

பரிசோதனைக்காக சுமார் 1,200 பெண்கள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். இயந்திரம் நிறுவப்படும் காலம் குறித்து தெளிவற்ற நிலை நீடிப் பதால், புதிய பரிசோதனைகளுக்கான முன்பதிவுகளும் தற் காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அரச கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம கருத்துத் தெரிவிக்கையில்-

"மார்பகப் புற்றுநோயை ஆரம்பகட்டத்திலேயே கண்டறிவது சிகிச்சையை எளிதாக்குவதோடு, குணமடைவதற்கான வாய்ப்பையும் அதிகரிக்கிறது.

ஆனால் தற்போது இடப்பற்றாக்குறையால் இந்தப் பரிசோதனைகள் தடைப்பட்டுள்ளன.

தனியார் மருத்துவமனைகளில் மம்மோகிராம் பரிசோதனைக்கு ரூ.25,000 க்கும் அதிகமான தொகை வசூலிக்கப்படும் நிலையில், குறைந்த வருமானம் கொண்ட பெண்களுக்கு இந்த அரச சேவை மிகவும் அத்தியாவசியமானதாகும்.

இந்த மையத்தின் மூலம் ஆண்டுதோறும் 100 இற்கும் மேற்பட்ட மார்பகப் புற்றுநோயாளர்கள் கண்டறியப்பட்டு, உரிய சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன.

தேசிய ரீதியில் இவ்வாறான பிரத்தியேகப் பரிசோதனை வசதியைக் கொண்ட ஒரே அரச மையமாக இது விளங்குகிறது- என்றார்.

மம்மோகிராபி பிரிவை நிறுவுவதற்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்யும் பணிகள் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் மற்றும் உரிய அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இச்செயல்முறை சற்று சிக்கலானது என்பதால் கால தாமதம் ஏற்படுவதாகவும் அந்தத் திட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் நலன் கருதி, சுகாதார அமைச்சும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணவேண்டும் என சுகாதாரத் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# இலங்கையின் தனிநபர் வருமானம் 5,000 அமெரிக்க டொலரை கடந்தது!

கொழும்பு, ஏப். 24

இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக நாட்டின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5,000 அமெரிக்க டொலர்கள் என்ற மைல்கல்லைக் கடந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருளாதார மீளாய்வு அறிக்கையிலேயே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் தரவுகளின் படி, கடந்த 2024 ஆம் ஆண்டில் 4,546 டொலர்களாக இருந்த தனிநபர் வருமானம், 2025 ஆம் ஆண்டில் 5,003 டொலர்களாக உயர்ந்துள்ளது.

இது ஒரே ஆண்டில் 457 டொலர் அதிகரிப்பாகும். முன்னதாக, 2018 ஆம் ஆண்டில் பதிவான 4,372 டொலர்களே இலங்கையின் அதிகபட்ச தனிநபர் வருமானமாகக் கருதப்பட்டது. 2022 ஆம் ஆண்டு இலங்கை பொருளாதார ரீதியாக வெள்ளையடிக்கப்பட்ட போது, தனிநபர் வருமானம் 3,464 டொலர்களாக வீழ்ச்சியடைந்திருந்தது. அந்த மோசமான நிலையிலிருந்து மீண்டு வந்துள்ள இலங்கை, தற்போது மிக வலுவான பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

(அ)

# 1,609 பேர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஏப். 25

குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்புக்காக பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட நடவடிக்கையின் நாளாந்த அறிக்கையை பொலிஸார் வெளியிட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக, பொலிஸ் பிரிவுகள் மட்டத்தில் அனைத்து பிரதேச பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த விசேட நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

அதற்கமைய நேற்று முன்தினம் பொலிஸாரால் 27,101 பேர் சோதனையிடப்பட்டதுடன், இதன்போது சந்தேகத்தின் பேரில் 1,609 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# நாட்டில் மீண்டும் தட்டம்மை; இரு சிறுவர்கள் அடையாளம்!

கொழும்பு, ஏப். 25

இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டிருந்த தட்டம்மை நோய் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளதாக சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை தட்டம்மையை முற்றாக ஒழித்த நாடு என 2019ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனம் அறிவித்திருந்தது. எனினும், 2023ஆம் ஆண்டிற்குப் பிறகு நாட்டின் சில பகுதிகளில் மீண்டும் ஆங்காங்கே தட்டம்மை நோயாளர்கள் பதிவாகத் தொடங்கினர்.

2025 ஜனவரி முதல் இதுவரை எந்தவொரு நோயாளரும் பதிவாகாத நிலையில், தற்போது மீண்டும் இருவர் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் அத்துல லியனபத்திரண கருத்து தெரிவிக்கையில்-

பாதிக்கப்பட்ட ஒரு சிறுவனின் மாதிரிகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு பரிசோதிக்கப்பட்டதில், அந்த வைரஸ் வெளிநாட்டிலிருந்து வந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தட்டம்மை நோய் குணமடைந்தாலும், அதனால் ஏற்படும் பாதிப்புகள் காரணமாக பல ஆண்டுகளுக்குப் பிறகு மரணம் சம்பவிக்கும் அபாயம் உள்ளது.

தட்டம்மை தாக்கினால் உடலின் நோய் எதிர்ப்பு நினைவாற்றல் பாதிக்கப்படும். இதனால் மற்ற நோய்களை எதிர்கொள்ளும் திறனை உடல் இழக்க நேரிடும்.

தட்டம்மை குணமடைந்து பல வருடங்களுக்குப் பிறகு மூளையைப் பாதிக்கும் SSPE எனும் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. இது மெல்ல மெல்ல மரணத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு கொடிய நிலையாகும்-என்றார். (அ)

# வெளிநாட்டு கடன் செலுத்துதலில் மோசடி; பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 25

வெளிநாட்டு கடன்களை மீளச் செலுத்தும் நடைமுறையில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் மற்றும் அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, "சத்ய கவேஷகயோ" அமைப்பினால் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான பிரேம்நாத் சி. தொலவத்த, தங்களது அமைப்பு நீண்ட காலமாக இவ்வாறான மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் தலையிட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழலில் வெளிநாட்டு கடன்களைக் கையாள்வதில் இடம்பெற்றுள்ள தவறுகள் குறித்து முறையான விசாரணை அவசியமானது எனவும், இது தொடர்பான விரிவான முறைப்பாட்டை மின்னஞ்சல் வாயிலாகத் தான் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பிரஜை என்ற ரீதியில் இந்த நிதி கொடுக்கல் வாங்கல்களின்போது தவறு செய்தவர்கள் யார் என்பதைக் கண்டறிவதே தமது பிரதான நோக்கம் என அவர் குறிப்பிட்டார்.

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் இதற்கு ஆலோசனைகளை வழங்கியவர்கள் என அனைவரும் தமது பொறுப்பிலிருந்து விலகிச் செல்ல முடியாது எனவும், அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

(அ)

# வெசாக் விடுமுறையில் மாற்றம்

கொழும்பு, ஏப். 25

2026 ஆம் ஆண்டுக்கான அரச விசாக பூரணை தினத்தை முன்னிட்டு மே மாதம் 31 ஆம் திகதி அரசாங்க விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அரச விசாக பூரணை உற்சவத்தின் உத்தியோகபூர்வ நிகழ்வு மே மாதம் 30 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, முன்னதாக மே மாதம் 2 ஆம் திகதி வழங்கப்படவிருந்த விடுமுறையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய, இந்த முறை விசாக பூரணை வாரம் மே மாதம் 27 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 2 ஆம் திகதிவரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புதையல் தோண்டிய இருவர் கைது!

கொழும்பு, ஏப். 25

குருநாகல் - பொல்பிதிகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல கொல்ல பகுதியில், சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அகழ்வாராய்ச்சி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் 64 மற்றும் 65 வயதுடையவர்கள் எனவும் மா-எலிய மற்றும் பொல்பிதிகம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொல்பிதிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# முட்டை விலை வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 25

இலங்கையில் முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளமையினால், தற்போது சந்தையில் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குளியாப்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அச்சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

உற்பத்தி அதிகரித்துள்ளமையே இந்த விலை குறைவிற்கான பிரதான காரணம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
25.04.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கவனத்துக்கு...!

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், நகர அபிவிருத்தி அமைச்சரும் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) முக்கிய தலைவர்களில் ஒருவருமான பிமல் ரத்நாயக்க இவ்வாரம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த வேளையில் அரசியல் நிலைவரங்கள் குறித்து கவனிக்கத்தக்க சில கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

தீவகத்தில் கடந்த புதன்கிழமை குறிகாட்டுவான் இறங்குதுறை புனரமைப்பின் இரண்டாம் கட்டப் பணிகளை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய அவர், "தெற்கில் தமிழர் விரோத அரசாங்கம் ஒன்று பதவியில் இருக்க வேண்டும் என்று வடக்கில் தோல்வியடைந்த தமிழ்க் கட்சிகள் விரும்புகின்றன. நாம் தமிழர் விரோதமாகச் செயற்படமாட்டோம். எம்மிடம் இனவாதம் கிடையாது. தேசிய மக்கள் சக்தி சகல இலங்கையர்களுக்குமான கட்சியாகும்" என்று குறிப்பிட்டார்.

பிறகு யாழ்நகரில் "டான்" தொலைக்காட்சி நிறுவனத்தின் அலுவலகத்துக்கு வருகை தந்து நேர்காணல் ஒன்றை வழங்கிய அமைச்சர் ரத்நாயக்க, "மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச போன்றவர்கள் இனிமேல் ஆட்சிக்கு வரப்போவதில்லை. அதனால் தமிழ் மக்கள் அஞ்சவேண்டியதில்லை. ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்புகள் மற்றும் ஊழல் முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளின் அறிக்கைகள் வெளியாகும்போது என்ன நடக்கும் என்பதை பொறுத்திருந்து பாருங்கள். அவர்களால் மீண்டும் ஆட்சியமைக்கக்கூடிய நிலை வருமா என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். தற்போதைய அரசாங்கம் கவிழும். அடுத்த பதவிக்கு வரக்கூடிய அரசாங்கம் என்ன செய்யுமோ என்று எவரும் பயப்பட வேண்டியதில்லை" என்று கூறினார்.

தரங்குறைந்த நிலக்கரி இறக்குமதி மற்றும் இணைய ஊடுருவல் மூலமாக திறைசேரிப் பணமோசடி விவகாரம் போன்ற முறைகேடுகள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது கடுமையான விமர்சனத்தை தெரிவிக்கும் எதிரணிக் கட்சிகள் அரசாங்கம் பதவி விலகி இடைக்காலப் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு வழிவிட வேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கியிருப்பதற்கு மத்தியிலேயே அமைச்சர் இந்த கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்.

வடக்கில் தோல்வியடைந்த தமிழ்க் கட்சிகள் தெற்கில் தமிழர் விரோத அரசாங்கம் ஒன்று பதவியில் இருக்கவேண்டும் என்று விரும்புவதாக ரத்நாயக்க தெரிவித்த கருத்தைப் பொறுத்தவரை, நாம் நீட்டிமுழக்கிப் பெரிதாக பிரசங்கம் செய்ய வேண்டியதில்லை. கடந்த ஒன்றரை வருட காலமாக பதவியில் இருந்துவரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களைப் போன்று தமிழர் விரோதமானது இல்லை என்பதை நிரூபிப்பதற்கு -தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு இதய சுத்தியுடன் தாங்கள் இதுவரையில் கடைப்பிடித்த கொள்கைகளையும் முன்னெடுத்த செயற்பாடுகளையும் அவரால் விளக்க முடியுமா என்ற ஒரேயொரு கேள்வியை மாத்திரம் கேட்க விரும்புகிறோம்.

சகல சமூகங்களையும் சமத்துவமாக நடத்துவதே தங்களது கொள்கை என்றும் மீண்டும் இனவாதமும் மதத் தீவிரவாதமும் தலைதூக்க ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அரசாங்கத் தலைவர்களின் இடையறாத பிரகடனங்களைக் கேட்கும்போது நல்லதாகவே தொனிக்கும்.

ஆனால், ஏற்கெனவே இலங்கை சுதந்திரமடைந்த நாட்களில் இருந்து பதவியில் இருந்த அரசாங்கங்களின் பாரபட்சமான கொள்கைகள் மற்றும் ஒடுக்குமுறைகளின் விளைவாகவும் பிறகு மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரின்போது அனுபவித்த அவலங்களின் விளைவாகவும் வடக்கு, கிழக்கில் மக்கள் முகங்கொடுக்க வேண்டியிருக்கும் "பிரத்தியேகமான" பிரச்னைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு பயனுறுதியுடைய உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் "சகலரையும் சமத்துவமாக நடத்தவது" என்ற பிரகடனத்தினால் நடைமுறையில் எந்த பயனும் ஏற்படப் போவதில்லை. உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் முன்னைய அரசாங்கங்களின் கீழ் வடக்கு, கிழக்கில் மக்கள் அனுபவித்து வந்தவற்றில் (மட்டுமீறிய இராணுவமயமாக்கம், குடிமக்களின் காணி அபகரிப்பு உட்பட) எத்தனை பிரச்னைகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முழுமையாகத் தீர்த்து வைத்திருக்கிறது அல்லது தீர்த்து வைப்பதில் நம்பகத்தன்மையுடன் அக்கறை காட்டியிருக்கிறது?

மாகாண சபை தேர்தல்கள், 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் போன்ற அதிகாரப் பரவலாக்கத்துடன் தொடர்புடைய விவகாரங்களில் முன்னைய அரசாங்கங்களை விடவும் எந்த வகையில் தற்போதைய அரசாங்கம் வேறுபட்ட முறையில் செயற்பட்டிருக்கிறது? அதிகாரப் பரவலாக்கத்தை கடுமையாக எதிர்த்து வந்த ஒரு கசப்பான கடந்த காலத்தைக் கொண்ட ஜே.வி.பி. தென்னிலங்கையின் சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளின் நிலைப்பாடுகளுக்கு விரோதமான முறையில் செயற்படுவதற்கான துணிச்சலை வெளிக் காட்டத் தயாராயில்லை. தென்னிலங்கையில் தமிழர் விரோத அரசாங்கம் ஒன்றையே வடக்கு தமிழ்க் கட்சிகள் விரும்புகின்றன என்று கூறும் அமைச்சர் ரத்நாயக்காவிடம் தங்களது அரசாங்கம் தமிழர் விரோதமானது இல்லை என்பதை வடக்கு, கிழக்கு மக்களுக்கு நிரூபிப்பதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது என்பதை கூறிவைக்க ஈழநாடு விரும்புகிறது. அவர் தங்களை இனவாதிகள் இல்லை என்று வேண்டுமானால் கூறிவிட்டுப் போகலாம். ஆனால், இனவாதத்தின் கைதிகளாக இருந்து கொண்டு இனவாத அரசியல் கலாசாரத்தின் நீட்சியை தாங்கள் உறுதி செய்வதை மறுக்க முடியுமா?

# உலக அமைதிக்கான நடைபயணம்: பிரதமர் ஹரிணி பங்கேற்பு

கண்டி, ஏப். 25

உலக அமைதியை வலியுறுத்தி "அமைதிக்கான நடைபயணம்" எனும் மகுடத்தின் கீழ் அமெரிக்காவில் 110 நாட்கள் நடைபயணத்தை மேற்கொண்ட பஞ்ஞாகர தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர், தற்போது இலங்கையில் தமது பயணத்தைத் தொடர்ந்து வருகின்றனர். தம்புள்ளையிலிருந்து கொழும்பு கங்காராமய வரை முன்னெடுக்கப்படும் இந்த அமைதி நடைபயணத்தின் மூன்றாம் நாள் நிகழ்வு, நேற்று கண்டி சிறீ தலதா மாளிகையிலிருந்து ஆரம்பமானது.

இந்த ஆரம்ப நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொண்டு சிறப்பித்தார். சிறீ தலதா மாளிகை வளாகத்திலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைபயணத்தின் மூன்றாம் நாள் பயணம், மாவனல்லை - பெலி



கம்மன வித்தியாவர்த்தன பிரிவேனா போத்குல் விகாரையில் நிறைவடையவுள்ளது.

(எ)

# பஸ்ஸில் சிறுமியிடம் பாலியல் அத்துமீறல்!

## சிப்பாய் ஒருவர் கைது

மட்டக்களப்பு, ஏப். 25

பொலநறுவையிலிருந்து கல்முனை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் 14 வயது சிறுமியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். புனானை இராணுவ முகாமில் கடமையாற்றி வரும் சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

பொலநறுவையிலிருந்து கல்முனை நோக்கி கடந்த 20ஆம் திகதி பயணித்த தனியார் பஸ் ஒன்றில், 14 வயதுச் சிறுமி தனது சிறிய தந்தையுடன் வாழைச்சேனையிலுள்ள வீட்டுக்குச் செல்வதற்காக ஏறியுள்ளார். இதேவேளை, விடுமுறை முடிந்து பணிக்குத் திரும்பிய குறித்த இராணுவச் சிப்பாயும் அதே பஸ்ஸில் ஏறிச் சிறுமிக்கு அருகில் அமர்ந்துள்ளார்.

பஸ் மன்னம்பிட்டிப் பகுதியைத் தாண்டிச் சென்று கொண்டிருந்த போது, சிப்பாய் சிறுமி மீது பாலியல் ரீதியான அத்துமீறல்களைச் செய்ய முற்பட்டுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த சிறுமி, அருகில் இருந்த தனது சிறிய தந்தையிடம் இது குறித்து முறையிட்டுள்ளார். இதனையடுத்து, ஆத்திரமடைந்த சிறிய தந்தை குறித்த இராணுவச் சிப்பாய் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அறிந்த பஸ் சாரதி, பஸ்ஸை நேராக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று நிறுத்தினார். அங்கு நடந்த விவரங்களைச் சாரதி பொலிஸாரிடம் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த இராணுவச் சிப்பாயைப் பொலிஸார் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்ததுடன், தாக்குதலை மேற்கொண்ட சிறுமியின் சிறிய தந்தையைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இராணுவச் சிப்பாய் குணமடைந்து வியாழக்கிழமை மாலை 04:30 மணியளவில் வெளியேற முற்பட்டபோது அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாயை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(எ)

# இந்தியாவில் கைதான தினுஷ சதுரங்கவுக்கு

## மே 5 வரை மறியல்

கொழும்பு, ஏப். 25

நாட்டிலிருந்து தப்பிச்சென்று இந்தியாவில் தலைமறைவாக இருந்தபோது கைது செய்யப்பட்டு, நாட்டுக்கு கொண்டு வரப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்ப ட்டிருந்த 'தினுஷ சதுரங்க' என்பவரை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த குறித்த சந்தேகநபர், வாழைத்தோட்டம் பொலிஸாரால் கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் ஆஜர்படுத் தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன்போது, பொலிஸார் நீதிமன்றத்தில் முன்வைத்த சமர் ப்பணத்தில், சந்தேகநபருக்கு எதிராக வழங்கப்பட்டிருந்த தடுப்புக்காவல் உத்தரவு காலம் நிறைவடைந்ததாகவும், எனவே அவரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறும் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தனர்.

இந்த நிலையில், பொலிஸாரின் கோரிக்கையை பரிசீலனை செய்த நீதிவான், சந்தேகநபரை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(எ)

## உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரித்தது

கொழும்பு, ஏப். 25

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மீண்டும் அதிகரிப்பை சந்தித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரெண்ட் மசகு எண்ணெய் விலை 1. 22 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன், ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் புதிய விலை 106. 355 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

சந்தைத் தரவுகளின்படி, டபிள்யு. ரி. ஐ. மசகு எண்ணெய் விலை 1.17 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன், ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 96.97 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

மர்பன் மசகு எண்ணெய் விலை மிக அதிகரிப்பாக 2.74 சதவீதம் அதிகரித்து, ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 105.95 டொலர்களாக அதிகரித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



ஏப்ரல் - 24 சனிக்கிழமை
பராபவ வருடம் - சித்திரை 12
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : நவமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் ஆதரவு பெருகும். குடும்பத்தின் பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
கணவன் மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்கா தீர்கள். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. மறைமுக எதிர்ப்புகள் வந்து போகும்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள்.

**கன்னி**
சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுங்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமைகள்வெளிப்படும். முயற்சிகள்பலிதமாகும்.

**துலாம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். சில சூட்சமங்களை சொல்லி தருவீர்கள்.

**தனுசு**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் ஒத்துழைப்பார். எதிர்பாராத வெற்றி கிடைக்கும்.

**மகரம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும்.

**கும்பம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
தடைகளை கண்டு தளர மாட்டீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

# யோஷித ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு ஜூன் மாதம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 25

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி போரஸ்ட் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஜூன் மாதம் 10 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் இந்த வழக்கு நேற்று அழைக்கப்பட்டது.

இதன்போது, அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவிக்கையில், இந்த குற்றச்சாட்டுகளுக்கு இணையாக மற்றுமொரு வழக்கு இலக்கம் 08 மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்குக்காக திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், இதற்கமைய இந்த வழக்குக்கும் திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்ய வேண்டியிருக்கும் என்றும் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை அறிவிப்பதற்காக திகதியொன்றை வழங்குமாறு அரச சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்படி, இந்த வழக்கை ஜூன் மாதம் 10 ஆம் திகதி மீண்டும் அழைக்க உத்தரவிட்ட மேல் நீதிமன்ற நீதிபதி, அன்றைய தினம் இது தொடர்பான முன்னேற்றத்தை அறிவிக்குமாறும் கட்டளையிட்டார்.

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கும் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், பணம் ஈட்டிய முறையை வெளிப்படுத்த முடியாத 59 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பணத்தை மூன்று தனியார் வங்கிகளில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிட்டதன் மூலம், பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்ததாகக் கூறி, சட்டமா அதிபரால் பிரதிவாதிகளுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ)

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வீழ்ச்சி

நுவரெலியா, ஏப். 25

மத்திய மலைநாட்டின் மேற்குச் சரிவுப் பகுதிகளில் அமைந்துள்ள நீரேந்து பகுதிகளில் நிலவும் கடும் வறட்சியான வானிலை காரணமாக, காசல்ரீ மற்றும் மவுசாக்கலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதாக அந்த நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

மவுசாக்கலை நீர்த்தேக்கத்தில் நேற்றுக் காலை 6 மணி நிலவரப்படி, நீர்மட்டமானது வான் மட்டத்திலிருந்து 50 அடி 11 அங்குலம் வரை குறைவடைந்துள்ளது.

எனினும், நேற்று முன்தினம் இப்பகுதிக்கு 12 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டமானது வான் மட்டத்திலிருந்து 40 அடி 10 அங்குலம் வரை குறைவடைந்துள்ளது.

இந்த நீர்த்தேக்கப் பகுதிக்கு நேற்று 14 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைத்துள்ளதாக பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

இந்த இரண்டு நீர்த்தேக்கங்களினதும் நீர்மட்டம் குறைந்துள்ளதால், நீர்த்தேக்கங்கள் நிர்மாணிக்கப்பட்ட போது நீரில் மூழ்கியிருந்த பழைய சிதைவுகள் மற்றும் பல தீவுகள் தற்போது மீண்டும் தென்படத் தொடங்கியுள்ளன.

விமலசுரேந்திர, லக்ஷபான, புதிய லக்ஷபான, கெனியன் மற்றும் பொல்பிட்டிய ஆகிய நீர்மின் நிலையங்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நீர் இந்த நீர்த்தேக்கங்களிலிருந்தே பெற்றுக்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

### சுகாதார சீர்கேட்டுடன்

# யாழில் வெதுப்பக உற்பத்தி பொருட்களை விற்பனை செய்த நால்வருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணத்தில் சுகாதார சீர்கேட்டுடன் வெதுப்பக உற்பத்திப் பொருட்களை விற்பனைக்காக வாகனங்களில் ஏற்றிச் சென்றவர்களுக்கு 80ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பகுதிகளில் வெதுப்ப உற்பத்திப் பொருட்கள் விற்பனை வாகனங்கள் தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன் போது, உரிய முறையில் வாகனத்தை பேணத் தவறியமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, மருத்துவச் சான்றிதழ் கொண்டிராமை போன்ற செயல்பாடுகளுக்கு எதிராக நான்கு உரிமையாளர்களுக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது உரிமையாளர்கள் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவர்களை கடுமையாக எச்சரித்த மன்று தலா 20ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது. (எ)

# 28,400 சீன சிகரெட்களுடன் 2 வெளிநாட்டவர்கள் கைது

கொழும்பு, ஏப். 25

சீனாவில் தயாரிக்கப்பட்ட சிகரெட் தொகையை சட்ட விரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வந்து, கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக வெளியே எடுத்துச் செல்ல முற்பட்ட இரண்டு வெளிநாட்டுப் பயணிகள் நேற்று அதிகாலை விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட சிகரெட் தொகையின் பெறுமதி சுமார் 42 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதான பயணிகள் இருவரும், கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்திலுள்ள, அறிவிப்பதற்கு ஏதுமற்ற பொருட்களைக் கொண்டு செல்வோர் பயன்படுத்தும் பசுமைப் பாதை ஊடாக இந்த சிகரெட் தொகையை வெளியே எடுத்துச் செல்ல முயன்ற போதே அதிகாரிகளிடம் சிக்கினர்.

கைது செய்யப்பட்டவர்கள் 35 மற்றும் 53 வயதுடைய பங்களாதேஷை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

சுங்கப் பிரிவினரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் படி பின்வரும் தகவல்கள் வெளியாகின,

சீன நாட்டவர் ஒருவரால் சீனாவில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த சிகரெட்கள், கம்போடியா ஊடாக மலேசியாவின் கோலாலம்பூருக்கு கொண்டு செல்லப்பட்டன.

அங்கிருந்து மலேசிய எயார் லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டன.

பின்னர், இவற்றை விமான நிலையத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்காக குறித்த பங்களாதேஷ் பிரஜைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவர்கள் கொண்டு வந்த 5 பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சீனத் தயாரிப்பான 28,400 சிகரெட்களை உள்ளடக்கிய 412 சிகரெட் பொதிகள் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் சந்தேக நபர்களைத் தடுப்புக் காவலில் வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெரும் வலுசக்தி பிரச்னை நாட்டுக்குள் தலைதூக்கும்

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 25

நிலக்கரி பிரச்னையால் ஏற்பட்டுள்ள மின்சார பிரச்னை, டீசல் பிரச்னை காரணமாக நாட்டின் வலுசக்தி துறை வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால், வலுசக்தியை கட்டியெழுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், நிச்சயமாக எதிர்வரும் ஜூலை, ஓகஸ்ட் மாதமாகும்போது நாட்டுக்குள் பெரும் வலுசக்தி பிரச்னை தலைதூக்கும் என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் காரியாலயத்தில் நேற்று முன்தினம் கூட்டு எதிர்க்கட்சி நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,



"ஏப்ரல் 20 ஆம் திகதியாகும்போது நாட்டுக்கு 25 நிலக்கரி கப்பல்களை கொண்டுவர ட்ரைடன் செம்பா நிறுவனம் ஒப்பந்தம் செய்திருந்தது. தற்போது அந்த காலம் முடிவடைந்துள்ளது. இதுவரை 15 நிலக்கரி கப்பல்களே நாட்டுக்கு வந்திருக்கின்றன. அதனையும் இறக்குவதில் பிரச்னை ஏற்பட்டிருக்கிறது. அதனால், 25 நிலக்கரி கப்பல்களையும் கொண்டுவரும் சவாலை வெற்றிகொள்ள முடியாமல் போயிருக்கிறது.

இதேபோன்று, அவசர விலைமனு கோரல் மூலம் நிலக்கரி கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் அந்த கப்பல்களில் இருந்து நிலக்கரிகளை தரையிறக்குவதில் சவால்கள் ஏற்பட்டுள்ளன. அதனால், நிலக்கரி பிரச்னையால் ஏற்பட்டுள்ள மின்சார பிரச்னை, டீசல் பிரச்னை காரணமாக நாட்டின் வலுசக்தி துறை வீழ்ச்சியடைந்து செல்வதால் நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால், அரசாங்கம் தற்போது 2009இல் இருந்து இடம்பெற்ற நிலக்கரி கொள்வனவு தொடர்பில் தேடிப்பார்க்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. இது நல்லது.

தற்போது உயிருக்கு போராடிக்கொண்டிருக்கும் வலுசக்தியை கட்டியெழுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், நிச்சயமாக எதிர்வரும் ஜூலை, ஓகஸ்ட் மாதமாகும்போது நாட்டுக்குள் பாரிய வலுசக்தி பிரச்சினை தலைதூக்கும்" - என்றார். (எ)

ரயில் தடம் புரண்டது

# கரையோர மார்க்கத்தில் போக்குவரத்து பாதிப்பு

மாத்தறை, ஏப். 25

பெலியத்தையிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த சாகரிகா ரயில் நேற்று வெள்ளிக்கிழமை காலை தண்டவாளத்தை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

வாதுவை ரயில் நிலையத்துக்கு அருகாமையில் இந்த விபத்து நேர்ந்தது.

ரயில் தடம் புரண்டதன் காரணமாக இரு திசைகளிலுமான ரயில் மார்க்கங்களும் முற்றாக முடக்கப்பட்டன. இதனால், கரையோர மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து தற்காலிகமாக பாதிக்கப்பட்டது. (எ)

## பாரிய வெடிபொருட்களுடன் ஒருவர் கைது!

அம்பாந்தோட்டை, ஏப். 25

அம்பாந்தோட்டை - வீரகெட்டிய, கசாகல அதிவேக வீதி நுழைவாயிலுக்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, பாரிய அளவிலான வெடிபொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தங்காலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, மத்தள பகுதியில் இருந்து வந்த கப் ரக வாகனமொன்றை நேற்று முன்தினம் மாலை சோதனையிட்ட போதே இந்த வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது, 14 கிலோ கிராம் வெடிமருந்துகள், 240 ஜெலட்னைட் குச்சிகள், 350 கிலோ கிராம் அமோனியா, 490 டெட்டனேட்டர்கள், 5,600 அடி நீளம் வெடிமருந்து நூல் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் முல்கிரிகல பகுதியைச் சேர்ந்த 57 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த வெடிபொருட்கள் பாறைகளை உடைக்கும் பணிக்காக கொண்டு செல்லப்பட்டமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் மற்றும் கப் ரக வாகனம் வீரகெட்டிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ)

## பணத்தகராறினால் ஒருவர் அடித்துக்கொலை

குருநாகல், ஏப். 25

குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்தெட்டுகல பகுதியில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

காயமடைந்த குறித்த நபர் குருநாகல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் வெல்லவ பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

உயிரிழந்தவருக்கும் அவரது அயல் வீட்டாருக்கும் இடையில் நிலவிய பணத்தகராறு முற்றியதே இந்த கொலைக்குக் காரணம் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# ரணில் இன்னும் 20 ஆண்டுகள் இந்த நாட்டை வழிநடத்துவார்

கொழும்பு, ஏப். 25

நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய ஒரு தலைவராக ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாக்க நாம் முயற்சிக்கிறோம். அவரைப் பற்றிப் பயப்பட வேண்டாம், அவர் இப்போது மிகவும் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார். அந்த அறுவை சிகிச்சையை 65 வயதில் செய்திருந்தால் 75 வயதில் ஓய்வு பெற்றிருப்பார். அதனால், இன்னும் 20 வருடங்களுக்கு இலங்கை பாதுகாப்பாக இருக்கும் என்று என்னால் பயமின்றிச் சொல்ல முடியும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

தேசிய சேவை சங்கம் ஏற்பாடு செய்திருந்த லலித் அத்துலத் முதலியின் 33ஆவது நினைவு தின நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு துறைமுக வளாகத்தில் நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"திறைசேரியில் ஒரு பாரிய கொள்ளை நடந்திருக்கிறது. இது இலகுவானதாக இருக்கப்போவதில்லை. அதனை அனுமதிப்பதற்கு பாராளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும். ஏனெனில், ஒருமுறை கொடுத்த பணத்தை மீண்டும் இரண்டாவது முறையாக வழங்க முடியாது. மீண்டும் 2. 5 மில்லியன் டொலர்களை வழங்குவதா? இல்லையா? என்று கேட்பதற்கு பாராளுமன்றத்தை கூட்ட வேண்டியுள்ளது. இன்று பேசப்படுகின்ற ஊழல் பற்றித்தான் நான் இப்போது கூறினேன்.

இதனால்தான் நாம் ஒரு தேசமாக முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அவ்வாறு இல்லையெனில், இரு பிரிவுகளாகப் பிரிந்து அடித்துக் கொள்வதைத் தவிர வேறு முன்னேற்றம் இருக்காது.

இங்கும் பல தொழிற்சங்கத் தலைவர்கள் இருக்கிறீர்கள், அது மிகவும் நல்லது. அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் மாத்திரமே துறைமுகத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். இல்லையெனில் துறைமுகத்திற்கு என்ன நடக்கும் என்று தெரியாது.

ஏனெனில், சர்வதேச அரசியலோடு நாம் மிகவும் அவதானமாகச் செயல்பட வேண்டும். அது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டிய இடம் கொழும்பு துறைமுகமாகும். ஒரு முதலீட்டாளர் வரும்போது, சர்வதேச அரசியலை நாம் அவதானமாகப் பார்க்க வேண்டும். நாம் அவதானமாகச் செயல்படாவிட்டால் ஒரு தேசமாக ஆபத்தைச் சந்திப்போம்"- என்றார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருடனிடமே பொறுப்பை ஒப்படைப்பதா? நிதிச் செயலாளர் பதவி விலக வேண்டும்!

கொழும்பு, ஏப். 25

திறைசேரியிலிருந்து அவுஸ்திரேலிய நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய 2. 5 மில்லியன் டொலர் நிதி மோசடி செய்யப்பட்ட விவகாரத்தில், நிதி அமைச்சின் செயலாளர் உடனடியாக பதவி விலக வேண்டும் அல்லது ஜனாதிபதியால் அவர் பதவி நீக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்தினார்.

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற இந்த பாரிய மோசடியை நான்கு மாதங்களாக மறைத்து வைத்திருந்தது ஏன் எனக் கேள்வி எழுப்பியுள்ள அவர், நிதி அமைச்சின் அதிகாரிகளை கொண்டே விசாரணைக் குழுவை அமைப்பது "திருடனிடமே பொறுப்பை ஒப்படைப்பதற்குச் சமமானது" எனச் சாடியுள்ளார். மேலும், நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அழைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"திறைசேரியிலிருந்து அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றுக்குச் செலுத்த வேண்டிய 2. 5 மில்லியன் டொலர் கடன் தவணைப் பணம் வேறொரு கணக்குக்குச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த டிசெம்பர் மாதம் நடந்த இந்த மோசடி, தற்போது ஏப்ரல் மாதத்தில் தான் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இவ்வளவு காலம் இந்த விடயத்தை மூடி மறைக்க முயன்றது ஏன்? இது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஏன் முறைப்பாடளிக்கப்படவில்லை?

நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவில் நிதி அமைச்சின் அதிகாரிகளே இடம்பெற்றுள்ளனர். இது திருடனிடமே பொறுப்பை ஒப்படைப்பதைப் போன்றதாகும். இந்த மோசடிக்கு நிதி அமைச்சின் செயலாளர் முழுப் பொறுப்பேற்று உடனடியாகப் பதவி விலக வேண்டும் அல்லது ஜனாதிபதி அவரை நீக்க வேண்டும். அத்துடன், இந்தச் செயலாளர் ஒரு அரசியல் நியமனமாகும். அவருக்கு அரச துறையில் எந்தவித அனுபவமும் இல்லை"- என்றார். (எ)

# இரத்தினபுரியில் தீ பரவல் 90 கடைகள் எரிந்து நாசம்



இரத்தினபுரி, ஏப். 25

இரத்தினபுரி பொதுச் சந்தை வளாகத்தில் வியாழக்கிழமை அதிகாலை ஏற்பட்ட தீ பரவலில் சுமார் 90 கடைகள் எரிந்து நாசமாகின என்று இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று அடுக்குகளை கொண்ட இந்த சந்தை வளாகத்தின் இரண்டாவது மாடியிலேயே இந்தத் தீ பரவல் ஏற்பட்டது. இங்கு சில்லறை மற்றும் மொத்த விலையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகள், பழங்கள் மற்றும் அரிசி, பருப்பு, சீனி, உருளைக் கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த பல கடைகள் தீயினால் முற்றாக அழிந்தன.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக இரத்தினபுரி மாநகர சபை மற்றும் பலாங்கொடை நகர சபை ஆகியவற்றின் தீயணைப்புப் பிரிவினர் இணைந்து செயல்பட்டனர்.

# பல பகுதிகளில் பிற்பகலில் 75 மி. மீ. மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஏப். 25

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிகுப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக் கூடும் என்று அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தென் மாகாணம் மற்றும் களுத்துறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் காலை வேளையிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மத்திய, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், வவுனியா மற்றும் குருநாகல் மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# போதைப்பொருளுடன் இருவர் கைதாகினர்!

கண்டி, ஏப். 25

வெவ்வேறு பகுதிகளில் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது, ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கண்டி பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் கண்டி துணைப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, பேராதனை - ஹிந்தகல பகுதியில் காலை ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது, 105 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

குறித்த நபர் ஹிந்தகல, தொழுவ வீதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

இதேவேளை கொழும்பு - முகத்துவாரம், ரஜமல்வத்தை பகுதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட மற்றொரு சோதனையின் போது, ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 300 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்டவர் முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய பெண் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# அயல் வீட்டுப் பெண் குளிப்பதை காணொலி எடுத்த இளைஞன் கைது

கொழும்பு, ஏப். 25

கொழும்பு 07 பகுதியில் அயல் வீட்டுப் பெண் குளிப்பதை இரகசியமாக காணொலி எடுத்து, அதனை அவரது நண்பிக்கு அனுப்பிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞனை மே மாதம் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு தலைமை நீதிவான் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

மருதமுனைப் பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர், கொழும்பு 07 இல் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார். அவருக்கு அருகிலுள்ள வீட்டில் வாடகைக்கு வசித்து வரும் இளம் பெண் ஒருவர் குளிப்பதை தனது தொலைபேசி மூலம் இரகசியமாக காணொலி எடுத்துள்ளார்.

அந்தக் காணொலியை பாதிக்கப்பட்ட பெண்ணின் நண்பி ஒருவருக்கும் சந்தேகநபர் அனுப்பியுள்ளார்.

நண்பி அளித்த தகவலின் பேரில் அதிர்ச்சியடைந்த அந்தப் பெண், உடனடியாக சந்தேகநபரின் வீட்டுக்குச் சென்று அவரைச் சத்தமிட்டுள்ளார். ஆத்திரமடைந்த அவர், சந்தேகநபரின் தொலைபேசியைப் பறித்து அங்கேயே அடித்து உடைத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் இது குறித்து கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார். இதனையடுத்து பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

நீதிமன்றத்தில் பொலிஸார் சமர்ப்பித்த தகவல்களை பரிசீலித்த நீதிவான், சந்தேகநபரை மே 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (எ)

கடல்சார் மீட்பில் புதிய மைல்கல்:

# கொழும்பு ஆழ்கடலில் நவீன சுழியோடி பயிற்சி ஆரம்பம்

கொழும்பு, ஏப். 25

இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான கடல்சார் தொழில்முறை உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் ஆழ்கடல் சுழியோடிப்பயிற்சிகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் இந்தியா - இலங்கை கடற்படைகளுக்கு இடையிலான 2026 ஆம் ஆண்டுக்கான நான்காவது சுழியோடிப் பயிற்சிகள் தற்போது கொழும்பில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த பயிற்சிகள் கொழும்பு கடற்கரையை அண்டிய பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இதில் இலங்கை மற்றும் இந்திய கடற்படையினர் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆழ்கடல் சுழியோடி பயிற்சிகள் மற்றும் கலப்பு எரிவாயு சுழியோடிப் பயிற்சிகளில் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இரு நாட்டு கடற்படைகளுக்கும் இடையிலான இந்தத் தொழில்நுட்பப் பகிர்வு, கடல்சார் மீட்புப் பணிகளில் புதிய மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது. (எ)

# கற்குவாரியை அகற்ற கோரி பொது மக்கள் ஆர்ப்பாட்டம்

திருக்கோவில், ஏப். 25

அனுமதியின்றி அமைக்கப்பட்ட கற்குவாரியை அகற்ற கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட நேருபுரம் பகுதியில் இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேச சபையின் அனுமதியின்றி கற்குவாரி அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து பொதுமக்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிலைமையை சீராக்கும் வகையில் அந்த இடத்துக்கு சென்ற அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் சு. சசிகுமார், திருக்கோயில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன் மூவரும் இணைந்து, குறித்த கற்குவாரி, அந்த இடத்திலிருந்து அகற்றப்படும் எனவும் இது சட்டத்துக்கு புறம்பானது என்றும் தெரிவித்தனர். (எ-09)

# இருவேறு பகுதிகளில் இடம்பெற்ற கோர விபத்துகளில் இருவர் பலி!

கொழும்பு, ஏப். 25

நாட்டின் இருவேறு பகுதிகளில் வியாழக்கிழமை இடம்பெற்ற கோர விபத்துக்களில் இருவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

லுணுகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுளை - மட்டக்களப்பு வீதியின் ஹொப்டன் பகுதியில் மாலை ஓட்டோ கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

பசறை நோக்கி பயணித்த குறித்த ஓட்டோ, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்ததில் இந்த விபத்து நேர்ந்தது. விபத்தில் காயமடைந்த சாரதி பதுளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் லுணுகலை பகுதியைச் சேர்ந்த 67 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

இதேவேளை, கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு - கண்டி பிரதான வீதியின் அம்பன்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறியொன்று, எதிரே வந்த வானுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

இந்த விபத்தில் வானின் பின் இருக்கையில் பயணித்த பெண் காயமடைந்து கேகாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் ஹந்தெஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 58 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சட்ட ஆவணங்கள்...

அண்மையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை நேற்று பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் போராட்டம் நடைபெற்ற இடத்தில் சென்று சந்தித்தார். பின்னர் அவர்களின் பிரதிநிதிகள் சிலரை தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு அழைத்து, சக பாராளுமன்ற உறுப்பினர் ச.சிறீபவானந்தராசாவுடன் இணைந்து கலந்துரையாடினார்.

அதன்போது, காணி உரிமையாளர்களிடம் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், மக்களுக்குரிய காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. இது விடயத்தில் நாம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டு வருகின்றோம்.

மக்களுக்கு ஒப்படைக்கப்படும் காணிகளை உரிய வகையில், உரிய ஆவணங்களுடன் கையளிக்க வேண்டும். அப்போதுதான் இப்பிரச்னை நிரந்தரமாக தீரும். உங்கள் வசம் ஆவணங்கள் இருந்தால் நிச்சயம் உங்களுக்குரிய மண் உங்களுக்கே சொந்தமாகும்.

எமது ஆட்சி மக்களுக்கானது, எனவே, மக்களின் சொத்துகளை பலவந்தமாக வைத்துக்கொள்வதற்குரிய எண்ணம் எதுவும் இல்லை.

தேசிய பாதுகாப்புக்கு அத்தியாவசியம் அற்றது எனக் கருதப்படும் இடங்களை விடுவிக்குமாறு எமது அரசாங்கம் உரிய தரப்புகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. எனவே, நிச்சயம் காணிப்பிரச்னைக்கு தீர்வு கிட்டும்-என்றார்.

அதேவேளை, கடந்த மாதம் இடம்பெற்ற தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின்போது மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஒருங்கிணைப்புக் குழு தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் ச.சிறீபவானந்தராசா தெரிவித்திருந்த நிலையில் , தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அப்பகுதி விடுவிப்பு சாத்தியமாகும் என மக்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

அதேபோன்று பலாலி இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு சென்று வழிபாடு நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் ஆலயத்திற்கான பாதை இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில் , தனியார் காணிகள் ஊடாக தற்காலிக பாதை ஊடாகவே ஆலயத்துக்கு மக்கள் சென்று வருகின்றனர்.

ஆலயத்துக்குச் செல்லும் பாதையில் இராணுவத்தினரின் வாகனத் திருத்தகம் அமைந்துள்ளதால் குறித்த பாதை விடுவிக்கப்படவில்லை. அதில் உள்ள வாகன திருத்தகத்தை அகற்றி பாதையை விடுவிக்க வேண்டும் என கடந்த ஒரு வருட காலத்திற்கு மேலாக மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றபோதிலும் அந்த பாதை விடுவிக்கப்படவில்லை

இது தொடர்பில் , வலி. வடக்கு பிரதேச சபையினர் கடந்த ,மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற அமர்வில், இராணுவத்தினரின் வாகன திருத்தகத்தை அகற்றி, ஆலயத்திற்கு செல்லும் பாதையை விடுவிக்கவேண்டும் என யாழ்.மாவட்ட இராணுவ கட்டளை தளபதியிடம் கடிதம் ஊடாக கோரிக்கை விடுப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## உறுப்பினர் பேசுவதற்கு...

முடிவுறுத்தவேண்டாம் என்றும் குறித்த உறுப்பினர் கூறியவேளை, அவரை அவமதிக்கும் வகையில் பேசிவிட்டு தவிசாளர் சபா மண்டபத்தை விட்டு வெளியேறினார்.

இது குறித்து உறுப்பினர் நா.பகீரதன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

தவிசாளரின் வட்டாரத்தில் உள்ள சண்டிலிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னால் உள்ள வீதி புனரமைப்பு மற்றும் அதனை வர்த்தமானியில் பிரசுரிப்பது தொடர்பாகவே பேச முயன்றேன். தவிசாளரின் சொந்த வட்டாரத்தில் உள்ள அந்த வீதிக்கான நடவடிக்கை இதுவரை எடுக்கவில்லை. அதனை நான் சுட்டிக்காட்ட முயன்றபோது தனக்கு அது பாதகமாக அமையும் என்பதால் அவர் சபையை விட்டு வெளியேறிவிட்டார்.

ஒரு தவிசாளர் தனது எண்ணத்திற்கு ஏற்ப சபைக் கூட்டத்தை முடிவுறுத்தி விட்டு வெளியேற முடியுமா என்று தெளிவுபடுத்த வேண்டும்-என்றார். (அ-05)

## நெடுந்தீவில்...

பொதுநிர்வாக அமைச்சின் அனுமதியுடன் 5,000 ரூபா ஆபத்துக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திலெடுத்து இத்தொகையை அதிகரிக்க வேண்டும். அதேநேரம், ஏனைய கடல் கடந்த தீவுகளான எழுவைதீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் ஆபத்துக் கொடுப்பனவை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பில் நிலவும் பிரச்னைகள் குறித்து ஆளுநர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக, யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மத்திய அரசின் திணைக்கள ஊழியர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று நீண்ட காலமாகப் பணியாற்றியும், மீண்டும் தமது சொந்த மாவட்டத்துக்குத் திரும்ப முடியாத நிலை காணப்படுகின்றது. இவர்களுக்கு இடமாற்றங்களை வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக நிலவி வரும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கை திட்டமிடல் சேவை மற்றும் இலங்கை பொறியியல் சேவை ஆகியவற்றுக்கான உத்தியோகத்தர் வெற்றிடங்களை விரைவாக நிரப்ப வேண்டும் என ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

ஆளுநரால் முன்வைக்கப்பட்ட இக்கோரிக்கைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆலோசகர் அசோக பீரிஸ், இவ்விடயங்கள் குறித்து அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சருடன் விரிவாகக் கலந்துரையாடி, சாதகமான தீர்வுகளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இக்கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர் சு.கபிலன், ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர் எஸ்.சிறீவாகீசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## ரணிலின் பாரியாரிடம்...

ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்கவிடம் வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்காகவே அவர்கள் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வெப்ப அளவு...

சோர்வை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தேவையான அளவு தண்ணீர் குடிக்கவும் முடிந்தவரை வெளிப்புறச் செயல்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அர்ச்சுனா எம்.பிக்கு...

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா உள்ளிட்ட இரு வைத்தியர்களுக்கு எதிராக, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் கீழ், யாழ்ப்பாண நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், இருவரையும் சொந்த பிணையில் செல்ல, மன்று அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த வழக்கு விசாரணை நேற்று, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, அவதூறு பரப்பினார் என குற்றம்சாட்டப்பட்டுள்ள அர்ச்சுனா மற்றும் ஜெயக்குமார் ஆகிய இரு வைத்தியர்களும், தமது சட்டத்தரணிகள் ஊடாக மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

இதன்போது இடம்பெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து, இரு வைத்தியர்களையும் சொந்த பிணையில் செல்வதற்கு மன்று அனுமதித்து. வழக்கு, எதிர்வரும் மே மாதம் 29 ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது. (அ)

## அடிப்படை பிரச்னை...

மகாவலித்துறையில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின்போது, பல்வேறு கோசங்களை எழுப்பியதுடன், பதாதைகளை ஏந்தியவாறு கறுப்பு துணிகளை கட்டியும் உழவு இயந்திரத்தில் கேலிச்சித்திரங்களை காட்சிப்படுத்தியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ந்து மாவலி இறங்குதுறையிலிருந்து நெடுந்தீவு பிரதேச செயலகம் வரை மக்கள் பேரணியாக சென்று பிரதேச செயலரிடம் ஜனாதிபதி, ஆளுநர், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கான மகஜர்களைக் கையளித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கும் போது-

கடந்த பல தசாப்த காலமாக நெடுந்தீவில் காணப்படும் குடிதண்ணீர் பிரச்னை, போக்குவரத்து பிரச்சனை, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறு அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

வரலாற்று பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தலமாக காணப்படும் நெடுந்தீவில் மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதாக அரசாங்கம் குறிப்பிட்டு வருகின்ற போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் ஆக்கபூர்வமாக முன்னெடுக்கவில்லை.

குறிப்பாக தற்போது கடல் போக்குவரத்தில் ஈடுபடும் நெடுந்தாரகை படகில் நூறு பேரை மாத்திரமே ஏற்றிச் செல்லும் நிலை காணப்படுகிறது.

அதிலும் 80 பேர் அரச உத்தியோகத்தர்களாக இருப்பதனால் பொதுமக்கள் 20 பேரை மாத்திரமே ஏற்றிச் செல்ல முடிகிறது. இதனால் பெரும்பாலான பொதுமக்கள் பயணிக்கமுடியாது புறக்கணிக்கப்படும் நிலை தொடர்ந்து காணப்படுகிறது-என்றனர். (அ)

## எரிபொருள்களின்...

வெளியிட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, மின்சாரம், பெற்றோலியம் மற்றும் குடிதண்ணீர் ஆகிய துறைகளை உள்ளடக்கிய பல்துறை ஒழுங்குமுறை கட்டமைப்பை உருவாக்குவதே நோக்கமாக இருந்தது.

2004ஆம் ஆண்டிலேயே பெற்றோலியம் மற்றும் குடிதண்ணீர் துறைகள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதற்கான சட்ட விதிகள் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதனால் தற்போது மின்சாரத் துறையை ஒழுங்குபடுத்துவதோடு மட்டுமே ஆணைக்குழுவின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் தனது தேர்தல் கொள்கை பிரகடனத்தில், எரிபொருள் விலையை நிர்ணயிக்கும் அதிகாரத்தை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

மின்சாரக் கட்டணங்கள் தற்போது எவ்வாறு ஒரு வெளிப்படையான சூத்திரத்தின் மூலம் தீர்மானிக்கப்படுகிறதோ, அதேபோன்ற முறையை எரிபொருளுக்கும் அமல்படுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

மின்சாரக் கட்டணங்கள் நியாயமான காரணங்களுக்காக மாற்றப்படும்போது பொதுமக்கள் அதனை ஏற்றுக்கொள்கின்றனர் ஏனெனில் அந்தச் செயல்முறை நம்பகமானது மற்றும் தெளிவானது.

தற்போது எரிபொருள் விலை நிர்ணயத்தில் ஆணைக்குழுவிற்கு எந்தப் பங்கும் இல்லை. முடிவுகள் எரிசக்தி அமைச்சினால் எடுக்கப்படுகின்றன. தற்போதைய முறையில் தெளிவு இல்லாததால், உலகச் சந்தை மாற்றங்களை இது சரியாகப் பிரதிபலிக்கிறதா என்ற சந்தேகம் மக்களிடையே நிலவுகிறது.

விலை நிர்ணய சூத்திரம் வெளிப்படையானதாக இருந்தால், விலை அதிகரிக்கப்பட வேண்டிய சூழலில் அதனை மக்களுக்குத் தெளிவாக விளக்க முடியும். இது அரசாங்கத்திற்கும் நுகர்வோருக்கும் இடையே உள்ள சந்தேகங்களைக் குறைக்க உதவும்.

இந்த மாற்றம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில், எரிபொருள் விலை மாற்றங்கள் தொடர்பான பொதுமக்களின் அதிருப்தி பெருமளவில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## சம்பா விலை...

இந்தத் தொடர்ச்சியான இறக்குமதி சந்தையில் நிலவிய தட்டுப்பாட்டை நீக்கி, விலை குறைப்பிற்கு வழிவகுத்துள்ளது. இறக்குமதிக்கு முன்னரான விலைகளுடன் ஒப்பிடுகையில் தற்போது கணிசமான அளவு விலை குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்பு ஒரு கிலோ 280 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட பொன்னி சம்பா அரிசி தற்போது ரூ. 225 ரூ. 235 என்ற எல்லைக்குள் குறைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் முன்பு ஒரு கிலோ 325 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட கீரி சம்பா அரிசி தற்போது ரூ. 240 ரூ. 255 என்ற எல்லைக்குள் குறைக்கப்பட்டுள்ளது. (அ)

## வளங்கள் நிறைந்த...

வடக்கு மாகாணத்தில் கூட்டுறவு இயக்கத்தின் ஊடாக விவசாயத்துறையில் நவீன மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில், முல்லைத்தீவு துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மற்றும் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஆகியன இணைந்து முன்னெடுக்கும் நெல் நடுகை இயந்திரத் தொடக்க விழா நேற்று துணுக்காய், கோட்டைகட்டிய குளத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் , நெல் நடுகை இயந்திரத்தை உத்தியோகபூர்வமாகத் தொடங்கி வைத்ததுடன், இயந்திரம் மூலமான நடுகைச் செயற்பாடுகளையும் நேரில் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, மல்லாவியில் “சியாப்” திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விதை நெல் தூய்மையாக்கல் இயந்திரத்தைப் பொருத்துவதற்கான அடிக்கல்லை நாட்டியதுடன், தூய விதை நெல் உற்பத்தித் திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்டுள்ள வயல் நிலங்களையும் பார்வையிட்டார்.

இதன்போது விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரை நிகழ்த்திய ஆளுநர்,

வளங்கள் நிறைந்த முல்லைத்தீவு மாவட்டம் வறுமையில் முதலிடத்தில் இருப்பது கவலைக்குரியது. இதனை எம்மால் மாற்ற முடியும். எமது இயற்கை வளங்களை முழுமையாகவும் அறிவியல் ரீதியாகவும் பயன்படுத்துவதன் ஊடாகவே மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும். கடந்த காலங்களில் எமது மாகாணத்திற்குக் கிடைத்த பல உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடந்தன. அவற்றை மீள இயக்க நாம் எடுத்து வரும் முயற்சியின் ஒரு பலனாகவே, தற்போது இந்த சங்கத்தின் அரிசி ஆலை பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

மணல் மாபியாவைப் போலவே நெல் சந்தையிலும் மாபியாக்கள் இயங்கி வருகின்றனர். இவர்கள் விவசாயிகளிடமிருந்து மிகக் குறைந்த விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்து, அதனைப் பதுக்கி வைத்து, மக்களுக்கு அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்கின்றனர். இந்தச் சுரண்டலைத் தடுக்க இடைத்தரகர்களற்ற ஒரு பொறிமுறை அவசியமாகும். கூட்டுறவுச் சங்கங்கள் பலமாகும் போது இந்த மாபியாக்களைக் கட்டுப்படுத்த முடியும். கடந்த காலங்களில் மாபியாக்களுக்குப் பின்னால் அரசியல்வாதிகள் இருந்தனர். ஆனால் இன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மாபியாக்களை ஒடுக்குவதற்கு முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றது.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு மத்திய அமைச்சர்கள் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றனர். இந்தச் சாதகமான அரசியல் சூழலை விவசாயிகள் மற்றும் கூட்டுறவுத்துறையினர் சரியாகப் பயன்படுத்தி மாகாணத்தை மேம்படுத்த முன்வர வேண்டும், என தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# மத்திய கிழக்கு போரினால் இலங்கையின் உணவுப் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலில்!

## உலக உணவுத்திட்டம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 25

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மேலோங்கிவரும் ஸ்திரமற்ற நிலையானது இலங்கையில் குடும்பங்களின் உணவுப் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருப்பதாக உலக உணவுத்திட்டம் எச்சரித்துள்ளது.

2022 முகங்கொடுக்க நேர்ந்த தீவிர பொருளாதார நெருக்கடி மற்றும் கடந்த வருட இறுதியில் "டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட தாக்கங்களில் இருந்து படிப்படியாக மீண்டுவரும் இலங்கை, இவ்வாறான வெளிப்புற அதிர்ச்சிகளால் தொடர்ந்து பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருப்பதாகவும் உலக உணவுத்திட்டத்தின் அண்மைய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"இலங்கை பெருமளவுக்கு இறக்குமதிகளில் தங்கியிருக்கும் பின்னணியில், உலகளாவிய விலை மாற்றங்களால் அது வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த எரிபொருள் தேவைப்பாட்டில் சுமார் 63 வீதமானவை இறக்குமதி செய்யப்படுகின்றன.

உலக சந்தையில் கடந்த 4 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு எரிபொருள் விலைகள் தற்போது உயர் வடைந்திருப்பதனால், அதன் நீட்சி யாக இலங்கையில் எரிபொருள் விலைகள் 33 - 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளன. இது போக்குவரத்து மற்றும் மின்சார செலவுகள் அதிகரிப்பதற்கு வழிகோலியிருப்பதுடன், அதன் விளைவாக இம்மாதம் பணவீக்கம் 5 சதவீதமாக உயர்வடை யும் என எதிர்பார்க்கப்படுகிறது" என்றும் உலக உணவுத்திட்டம் கரிசனை வெளியிட்டுள்ளது.

அதேவேளை எரிபொருள் செலவு அதிகரிப்பானது உணவுப் பணவீக்கத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள உலக உணவுத்திட்டம், போக்குவரத்து மற்றும் உற்பத்திச் செலவுகள் அதிகரித்திருப்பதன் விளைவாக உணவுப்பொருள்களின் விலைகளும் உயர்வடைந்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.

அதேபோன்று "உர விநியோகத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் விவசாயத்துறை மீது மேலதிக அழுத்தங்களைத் தோற்றுவித்துள்ளன. உலகளா விய ரீதியிலான உர வர்த்தகத்தில் சுமார் 30 வீதமானவை ஹோர்முஸ் நீரிணை ஊடாகவே மேற்கொள்ள ப்படுகின்றன.

தற்போது அங்கு தீவிரமடைந்தி ருக்கும் நெருக்கடிகள், தனது உரத்தேவைப்பாட்டில் 90 - 100 வீதம் வரை இறக்குமதி செய்யும் இலங்கைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். உரங்களின் விலை அதிகரிப்பானது மொத்த விளைச்சலில் வீழ்ச்சியை ஏற்படுத்தக்கூடும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 வீத பங்களிப்பை வழங்குவதும், 26 வீத பணியாளர்களைக் கொண்டதுமான விவசாயத்துறையை வெகுவாகப் பாதிக்கும்" என்றும் உலக உணவுத்திட்டத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

### ஐ.நா. அமைதிப்படை விவகாரம்

## பாதுகாப்பு செயலர் துய்யகொந்தா ஐ.நா. உதவிச் செயலருடன் சந்திப்பு!



கொழும்பு, ஏப். 25

நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை தலை மையகத்துக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கை பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, மத்திய கிழக்கு, ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தி யங்களுக்கு அரசியல் மற்றும் சமாதான கட்டமைப்பு விவ காரங்கள் மற்றும் சமாதான நடவடிக்கைகள் துறைகளுக்கு பொறுப்பான உதவி பொதுச் செயலாளர் ஹலேட் ஹியா ரியுடன் உயர்மட்ட சந்திப்பில் ஈடுபட்டார்.

இந்த சந்திப்பில், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி ஜயந்த ஜயசூரியவும், இலங்கை பிரதிநிதிக் குழுவினரும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலின்போது, ஐ.நா. சமாதான பணிகளுக்கான படையினரை அனுப்புவதற்கான முன்பதிவுத் திட்டங்கள் குறித்து இலங்கை பிரதிநிதிகள் விரிவான விளக்கத்தை வழங்கினர்.

அனுப்பப்படவுள்ள அனைத்து பணியாளர்களும் மனித உரிமைகள் தொடர்பான கவனிப்புக் கொள்கை, சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஆகியவற்றில் விரிவான மற்றும் கட்டமைக்கப்பட்ட பயிற்சிகளைப் பெறுவார்கள் என வலியுறுத்தப்பட்டது.(அ)

## பொலிஸ் வாகனங்களுடன் மோதிய எரிபொருள் பவுசர்

முல்லைத்தீவு, ஏப். 25

முல்லைத்தீவு - முள்ளியவளை, மாஞ்சோலை பகுதியில் பொலிஸாரின் வாகனங்கள் மீது எரிபொருள் பவுசர் ஒன்று மோதி நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

முள்ளியவளை மாஞ்சோலை சந்திக்கு முன்பாக பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தவேளையில், வீதியோரமாக பொலிஸாரின் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இதன்போது, அந்த வழியாக வந்த எரிபொருள் ஏற்றிச் சென்ற பவுசர் வாகனம், கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் மீது மோதித் தள்ளியுள்ளது.

இந்த விபத்தில் பொலிஸ் ஓட்டோ பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது. எனினும், அதிர்ஷ்டவசமாக இந்த சம்பவத்தில் எவருக்கும் உயிர் ஆபத்துக்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## பிள்ளையானைச் சிறையில் மூன்று தடவை சந்தித்த பேராசிரியர் ரொஹான் குணரத்ன!

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணையில் கசிந்த தகவல்கள்

கொழும்பு, ஏப். 25

2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில், பிள்ளையான் என்ற முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் பேராசிரியர் ரொஹான் குணரத்ன ஆகியோரை மையப்படுத்தி புதிய தகவல்கள் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் பிள்ளையான் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, பேராசிரியர் ரொஹான் குணரத்ன அவரை 3 சந்தர்ப்பங்களில் நேரில் சந்தித்து பேசியுள்ளதாக குற்றப்புலனாய்வுத்துறையினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

பிள்ளையானுடன் சிறையில் இருந்த ஒருவரின் சாட்சியத்தின் அடிப்படையில் இந்த தகவல் வெளியாகியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சந்திப்புகளின்போது பேராசிரியர் குணரத்னவுடன் இரு பெண்கள் சென்றுள்ளனர்.

அவர்களில் ஒருவர் பின்னர் நேரடியாக இலங்கை இராணுவத்தில் மேஜர் தரத்துக்கு நியமிக்கப்பட்டதாக குற்றப்புலனாய்வுத்துறையினர் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்த சஹ்ரான் ஹாஷிமின் சகோதரர் செய்னி மௌலவி மற்றும் மில்ஹான் ஆகியோரை பிள்ளையான் தான் இருந்த சிறை அறைக்கே அழைத்துச் சென்றதாக அந்தச் சாட்சியாளர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்தபோது எவராவது அருகில் சென்றால் பேச்சை மாற்றி விடுவார்கள் என்றும் சாட்சியாளரை கோடிட்டு, குற்றப்புலனாய்வுத்துறையினர் நீதிமன்றுக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், 2015 முதல் 2021 வரை பிள்ளையான் மட்டக்களப்பு சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

அந்த காலப்பகுதியிலேயே இந்தச் சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை,இந்த வழக்குடன் தொடர்புடைய ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே உள்ளிட்ட மூன்று சந்தேக நபர்கள் குறித்து மேலதிக விசாரணை அறிக்கையொன்றையும் குற்றப்புலனாய்வுத்துறையினர் நீதிமன்றில் முன்வைத்துள்ளனர். (அ)

## கண் சுகாதார நடவடிக்கைகளில் முன்னோடியாக உள்ளது வடக்கு!

### ஆளுநர் வேதநாயகன் பாராட்டு



யாழ்ப்பாணம், ஏப். 25

இலங்கையில் கண் சுகாதாரம் தொடர்பான நடவடிக்கைகளில் வட மாகாணமே முன்னோடியாகத் திகழ்கின்றது. அந்த வரிசையில் இன்று கிளிநொச்சியில் ஆரம்பமாகும் "கிராமிய ஒளி வாழ்வுத் திட்டம்" முழு நாட்டுக்கும் ஒரு புதிய வழிகாட்டியாக அமையப்போகின்றது என வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

வட மாகாண மக்களின் கண் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட "கிராமிய ஒளி வாழ்வுத் திட்டத்தின்" அங்குரார்ப்பண நிகழ்வும், சுகாதார அதிகாரிகளுக்கான விசேட பயிற்சிப் பட்டறையும் நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரதான மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய கௌரவ ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கண் சத்திர சிகிச்சைப் பிரிவில் வட மாகாணம் இன்று புதியதொரு பரிணாமத்தை எட்டியுள்ளது. இலங்கையிலேயே வட மாகாணத்தில் மட்டும்தான் கண் சத்திர சிகிச்சைக்கான காத்திருப்புப் பட்டியல் "பூச்சிய" நிலையில் உள்ளது. எமது மாகாணத்தின் இந்தச் சிறந்த சேவையினால் கவரப்பட்டு, ஏனைய மாகாணங்களில் இருந்துகூட மக்கள் இங்கு வந்து சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு செல்கின்றனர். இது எமது மாகாணத்துக்குக் கிடைத்த கௌரவமாகும்.

இந்த மகத்தான சாதனையின் பின்னணியில் கண் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் எம்.மலரவனின் அளப்பரிய அர்ப்பணிப்பு உள்ளது. அவருக்கு உறுதுணையாக கலாநிதி வே.சர்வேஸ்வரன் செயற்படுகின்றார். போர் முடிவடைந்த காலத்திலிருந்தே எமது மக்களுக்காகப் பல்வேறு மருத்துவ உதவிகளைச் செய்து வரும் இவர்கள் இருவருமே இந்த புதிய திட்டத்தின் ஆணிவேர்களாவர். இவர்களின் தன்னார்வ முயற்சியால் இந்தத் திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பமாவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது - என்றார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சி.சேரலாதன், வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி, கிளிநொச்சி மாவட்ட எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media